1980—1982 ஆம் ஆண்டுகளில் தரம் உயர்த்தப்பட்ட ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள்.

*வினா எண் 459—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஆதிதிராவிடர்—நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1980-1981 மற்றும் 1981-1982 ஆம் ஆண்டுகளில் எத்தனை ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள் உயர் நிலைப்பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : 1980-81-ஆம் ஆண்டில் எந்தவொரு ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளியும் உயர் நிலைப்பள்ளியாக உயர்த்தப்படவில்லை.

1981-82 ஆம் ஆண்டில் திருச்சி மாவட்டம் பாம்பாட்டிபட்டியில் உள்ள நடுநிலைப்பள்ளியும் இராமநாதபுரம் மாவட்டம் சுந்தரராஜபுரத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியும் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன விதியின் அடிப்படையில் அந்த ஆதிதிராவிட நலப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாக உயர்த்தப்படுகின்றன. மேலும் அந்தப் பள்ளிகளுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளிகளாக இருக்கும் இடங்களில் அங்கே வந்து பயிலுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தும், சுற்றுப்புறப் பகுதிகளில் எந்தெந்தப் பகுதிகளில் உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன என்பதைப் பார்த்தும் அங்கே இருக்கும் தேவையின் அடிப்படையில் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படுகின்றன.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதி இரும்பேடு கிராமத்திற்கு இது போன்று உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டும் என்று ஏதாவது கோரிக்கை வந்திருக்கிறதா? அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல இரும்பேடு பக்கத்திலேயிருந்து அப்படி ஏதாவது கோரிக்கை வந்ததா என்பது பற்றிய குறிப்பு என்னிடத்திலே

1982 மார்ச் 19]

இல்லை. 1982–83ஆம் ஆண்டுக்கு 9 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டும் என்பதற்காக நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கிறது. அதிலே இந்தப் பகுதி வருகிறதா என்பதைப்பற்றி தற்போது எனக்குத் தெரியாது.

திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981–82ஆம் ஆண்டுகளுக்கு 2 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பார்ட் II ஸ்கீமில் எத்தனை நடுநிலைப் பள்ளிகளை உயர்த்தியிருக்கிறீர்கள் ? அதிலே எனது தொகுதியான துறவூர், சணூர் இரண்டும் எடுத்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அதைப்பற்றிய உண்மைகளை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டைப் பொறுத்தவரையில் 9 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படவிருக்கிறது என்று சொன்னேன். அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற தொகுதியிலே இருக்கக் கூடிய பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்த வேண்டும் என்பதற்கான வாய்ப்பு இருக்கிறதா என்று கேட்டிருக்கிறார்கள். அது பற்றிய விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போடவும்.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில், ஆதி திராவிட நலத்துறையின் சார்பாக நடத்தப்படுகிற நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டுமானால், அதன் அருகாமையில் 4, 5 மைலுக்குள்ளாக வேறு ஏதாவது உயர்நிலைப் பள்ளியிருந்தால, ஆதி திராவிடர் உயர்நிலைப் பள்ளியாக, இந்த நடுநிலைப் பள்ளியை ஆக்கக் கூடாது என்று விதியிருக்கிறதா? அதையெல்லாம் தவிர்த்து, இந்த விதிமுறைகளையெல்லாம் கையாளாமல், அந்த மக்களுக்கு நன்மைகள் செய்துதர வேண்டும் என்ற நோக்கத்தில், அந்தப் பள்ளிகளை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஆதி திராவிட நலத்துறையின்கீழ் 1073 பள்ளிகள் இருக்கின்றன. விதிமுறைகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். தற்போது உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்த வேண்டும் என்றால், அந்தப் பக்கத்திலேயே இருக்கக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தும், சுற்றுப்புற அருகாமையில் வேறு உயர்நிலைப் பள்ளிகள் இருந்தால் அதைப் பார்த்தும், அடிப்படையில தேர்வு செய்யப்பெற்று, அதன்பிறகு அந்த அடிப்படையில் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக

உயர்த்தப்படுகின்றன. நாம் இப்போது நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தி வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்தை அரசு பரிசீலிக்கும்.

ஆதி திராவிடர் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்குமாத மொன்றுக்கு உணவுக்காக செலவிடப்படும் தொகை

*வினா எண். 460—திரு. செ. செம்மலை: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) அரிசன மாணவ, மாணவியர் விடுதிகளில் தற்போது உணவுக்காக மாதம் ஆள் ஒன்றுக்கு செலவிடும் தொகை எவ்வளவு?

(ஆ) அதை மேலும் உயர்த்த அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; (அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு, சென்னை நகரில் உள்ள கல்லூரி மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்களைச் சார்ந்த விடுதிகளில் ரூ. 80 ஆக வழங்கப்பட்டு வந்த தொகையானது, 15 ரூபாய் உயர்த்தப்பட்டு ரூ. 95ஆக அளிக்கப்படுகிறது

புறநகரில் உள்ள கல்லூரி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங் களைச் சார்ந்த விடுதிகளில் ரூ 65 ஆக வழங்கப்பட்டு வந்த தொகையானது தற்போது ரூ. 15 உயர்த்தப்பட்டு 80 ரூபாயாக அளிக்கப்படுகிறது.

பள்ளி விடுதிகளில் இருப்பவர்களைப் பொறுத்தவரையில் 45 ரூபாயாக வழங்கப்பட்டு வந்த தொகையானது 15 ரூபாய் உயர்த்தப்பட்டு 60 ரூபாயாக அளிககப்படுகிறது.

1981–82 கல்வி ஆண்டு முதல் இந்தத் தொகையை செலவிட அரசு நிலை எண். 633, சமூக நலத்துறை நாள்: 27—8—1981ல் ஆணைகள் வெளியிட்டுள்ளது.

திரு. செ. செம்மலை: மாண்டமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற உதவிகளை ஒரு குடும்பத்தில் 2 பேர் களுக்கு மேல இருந்தால் அளிக்கக்கூடாது என்று மத்திய அரசு